மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் கூடம் கட்டுவதற்கு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 40, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

40—

கரூரில் புதிய தொழிற்பேட்டை அமைத்தல்.

*10309—திரு ம. சின்னசாமி :

மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு.எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருச்சி மாவட்டத்திலுள்ள கரூரில் ஏற்கனவே அமைக் கப்பட்டுள்ள தொழிற்பேட்டைகள் விரிவாக்கம் செய்வதற்கான இட வசதி இல்லாததால் தனியே கரூர் வட்டத்தில் ஆத்தூர் கிராமத்தில் 38.33 ஏக்கர் நிலம் தொழிற்பேட்டை அமைப்பதற் காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் தொழில் முனைவோர்களின் தேவைக்கேற்ப வசதிகளுடன் கட்டுமானப் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படு கிறது.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இரண்டாவது கட்டமாக ஆரம்பிக்கப் பட இருக்கிற தொழிற்பேட்டைகளில் தொழிற்கூடங்களை அதாவது ஷெட்டுகளை அரசினுடைய செலவில் கட்டிக் கொடுத்தால்தான் அந்த ஷெட்டுகளை வாங்குவதற்கு தொழில்

1993 பிப்ரவரி 9]

முனைவோர் முன்வருவார்கள், இல்லை என்றால் காலி மனைகளை வாங்கிவிட்டு தொழில் தொடங்காமலே அதைப் போட்டு விடுவார்கள். நம்முடைய நோக்கம் நிறைவேறாது. ஆகவே தொழிற்கூடங்களைக் கட்டுவதற்காக Small Industries Development Bank of India — S.I.D.B.I. என்று ஒரு நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனத்தின் கடனைப் பெற்று தொழிற்கூடங்களைக் கட்டிக் கொடுத்தால் அதைத் தவணை முறையில் தொழில் முனைவோர் வாங்குவதற்கு வசதியாக இருக்கும். அந்த ஏற்பாட்டினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவதற்கு முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ள தொழிற்பேட்டை சிட்கோ மூலமே தொடங்கப்பட்டு தொழில் முனைவோருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. எனவே இப்போது ஆத்தூரில் தொடங்கப்பட இருக்கும் தொழில் பேட்டை பொறுத்தவரையிலும் கூட 'சிட்பி' மூலம் கடன் தொகை பெற்று தொழிற்பேட்டைகள் அமைக்கும் முயற்சி சிட்கோ மூலமே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்கூடங்களில் ஆதிதிராவிடர்களுக்கென்று ஒதுக்கீடு செய்தால் அவர்களும் தொழிற்கூடங்கள் அமைப்பதற்கு வசதியாக இருக்கும். அப்படிப்பட்ட ஒதுக்கீட்டைச் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்களாக அப்படிப்பட்ட ஆதிதிராவிட மக்களும் விண்ணப்பங்கள் செய்வோர்களேயானால் அவர்களுக்கும் சிட்கோ மூலம் கட்டுமானப் பணி மேற்கொள்ளப்படுகிற தொழிற் பேட்டைகளில் தொழிற்கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்கள் தொழிற்பேட்டைகள் அமைப்பது என்றால் அவர்களுக்குக் கிடைக்கிற சலுகைகளைப்

பெறுகிற வகையில் தாட்கோ மூலமாகத்தான் அவர்கள் விண்ணப்பிக்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தாட்கோ சேர்மென்-உடன் கலந்து பேசி இரண்டு சலுகைகளையும் அவர்கள் பெறுகிற வகையில் ஒரு கூட்டுக் கூட்டத்தை நடத்தி இதைப்பற்றி விவாதித்து முடிவெடுத்து கரூர் பகுதியில் வாழ்கிற ஆதிதிராவிடர்கள் பயன்பெறுகிற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில்* உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்).

2. தகவல் கோரல்.

8—2—1993 அன்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சிலர் அவையிலிருந்து வெளியேறியது பற்றி பத்திரிகைகளில் வந்த செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்தச் சட்டமன்றத்தில் நடைபெற்ற ஓர் நிகழ்ச்சி பற்றி எங்களுக்கு ஏற்பட்டுள்ள, ஒரு சந்தேகத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் விளக்கிக் கூறவேண்டும், தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக பத்திரிகைகளில் வந்துள்ள சில செய்திகளும் எங்களுடைய குழப்பத்தை மேலும் வளர்த்து இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சில உறுப்பினர்கள் இந்த அவையை விட்டு வெளியேறி